# தேச பக்தி

DHESA BAKTHI

நடுநிலை காலை நாளிதழ்

RNI.No.TNTAM/2022/86012

ஆசிரியர் : G. ராஜா 9842364068 இணைஆசிரியர் : R. கண்ணன் 9994422779

★மலர்:05 ★இதழ்: 150 ★ 30.09.2026 ★தமிழ் நாளிதழ் ★புதன்கிழமை ★பக்கம்-4 ★விலை.ரூ.5/- சென்னை

★Volume:05 ★Issue:150 ★30.09.2026 ★TamilDaily ★Wednesday ★Page-4 ★Price-₹5/- Chennai



## மதுராந்தகம் அருகே ரூ.10 லட்சம் பறிமுதல் செய்த பறக்கும் படை

மதுராந்தகம் அடுத்த புக்கத்துறை அருகே தேர்தல் பறக்கும் படையினரின் சோதனையில் ஆவணங்களின்றி எடுத்துச் செல்லப்பட்ட ரூ.9 லட்சத்து50ஆயிரம்சிக்கியது.

மதுராந்தகம் தொகுதி இடைத் தேர்தலை முன்னிட்டு தொகுதி மக்கள் வாக்காளருக்கு பணம் அல்லது பரிசு பொருட்கள் வழங்கப்படுகிறதா என தேர்தல் பறக்கும் படை சோதனை செய்து வருகிறது.

இந்நிலையில், புக்கத்துத்துறை உத்திரு மேரூர் சாலையில் வட்டாட்சியர் புத்தியப்பன் தலைமையிலான பறக்கும் படையினர் வாகன சோதனையில் ஈடுபட்டிருந்தனர்அப்போது, செங்கல்பட்டு நோக்கி வந்த காரை பறக்கும் படையினர் சோதனை செய்த போது காரில் உரிய ஆவணங்களின்றி எடுத்துச் செல்லப்பட்ட ரூ.9 லட்சத்து50ஆயிரம்பணத்தை பறிமுதல் செய்து கருவூலத்தில் ஒப்படைத்தனர்.



தேனி மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில், மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் சார்பில் நடைபெற்ற மாற்றுத்திறனாளிகளுக்கான சிறப்பு குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் இரா.வைத்திநாதன் இ.ஆ.ப.,44மாற்றுத்திறனாளிகளுக்குரூ.26.70இலட்சம்மதிப்பிலானநலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

## மதுராந்தகத்தில் 893, தாராபுரத்தில் 1,201 தபால் வாக்குகள் பதிவானது

மதுராந்தகத்தில் 893 தபால் வாக்குகளும் தாராபுரம் தொகுதியில் 1,201 தபால் வாக்குகளும் பதிவாகியுள்ளதாக தேர்தல் நிர்வாகம் தெரிவித்துள்ளது.

மதுராந்தகம் மற்றும் தாராபுரம் சட்டப்பேரவை தொகுதிகளுக்கான இடைத்தேர்தல் வரும் அக்6ம் தேதி நடைபெற உள்ளது. இதற்காக, மாவட்ட தேர்தல் நிர்வாகம் பல்வேறு முன்னேற்பாட்டுப் பணிகளை மேற்கொண்டு வருகின்றன.

இந்நிலையில், மதுராந்தகத்தில் தபால் வாக்குகளை சேகரிக்கும் பணிகள் நேற்று தொடங்கின. இதற்காக, தொகுதியின் தேர்தல் நடத்தும் அலுவலர் உத்தரவின்பேரில் 8 குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. இக்குழுவினர் மூலம், மேற்கண்ட தொகுதியில் 85 வயதுக்கு மேற்பட்ட முதியோர் மற்றும் மாற்றுத் திறனாளிகள் உள்பட 931 வாக்காளர்கள் தபால் வாக்கும் வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

மேலும், இந்தச் சிறப்பு குழுவினர் 85 வயதுக்கும் மேற்பட்ட முதியோர் வீடுகளுக்கே சென்று வாக்குகளை பெறும் பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர். இந்நிலையில், 29ம் தேதி நிலவரப்படி மதுராந்தகம் தொகுதியில் 893 தபால் வாக்குகள் பதிவாகியுள்ளதாக தேர்தல் நிர்வாக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

தாராபுரம்: இதேபோல் தாராபுரம் தொகுதியில், தபால் வாக்களிக்கத் தகுதிபெற்ற 1,236 பேரில் 1,201 பேர்தங்களது வாக்குகளைப் பதிவு செய்துள்ளனர்.




இங்கு கடந்த 22ம் தேதி முதல் தேர்தல் அலுவலர்கள் அடங்கிய குழுக்கள், தகுதியான வாக்காளர்களின் வீடுகளுக்கே சென்று தபால் வாக்குகளைப் பதிவு செய்யும் பணியில் ஈடுபட்டனர். இதற்காக மொத்தம் 30 குழுக்கள் அமைக்கப்பட்டு, வாகனங்களில் சென்று வாக்காளர்களிடம் இருந்து தபால் வாக்குகள் பெறப்பட்டன.

மூத்த குடிமக்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகளிடம் தபால் வாக்கு பெறும் பணி நேற்றுடன் நிறைவடைந்த நிலையில், தேர்தல் பணியில் உள்ள காவலர்களுக்கான தபால் வாக்கு செலுத்தும் பணி வரும் சனிக்கிழமை நடைபெற உள்ளதாக அலுவலர்கள் தெரிவித்தனர்.

# தாராபுரத்தில் இன்று முதல்வர் விஜய் பிரச்சாரம்: பொதுக்கூட்டத்தில் பங்கேற்க 10 ஆயிரம் பேருக்கு அனுமதி

தாராபுரத்தில் இன்று நடைபெறும் தேர்தல் பொதுக் கூட்டத்தில் முதல்வர் விஜய் பேசுகிறார். இதில் பங்கேற்க 10 ஆயிரம் பேருக்கு மட்டுமே அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

திருப்பூர் மாவட்டம் தாராபுரம் (தனி) சட்டப்பேரவை தொகுதி இடைத் தேர்தல் வரும் அக்.6ம் தேதி நடக்கிறது. தவெக, திமுக, அதிமுக, நாதக, இந்திய கம்யூனிஸ்ட் மற்றும் சுயேச்சைகள் உள்ளிட்ட 22 வேட்பாளர்கள் களத்தில் உள்ளனர்.

இந்நிலையில், தவெக வேட்பாளர் சத்யபாமாவை ஆதரித்து கட்சியின் தலைவரும், தமிழக முதல்வருமான விஜய் இன்றுதாராபுரத்தில்நடைபெறும் பிரச்சாரப் பொதுக்கூட்டத்தில் பேசுகிறார். இதற்காக தாராபுரம் உடுமலை சாலையில் அமைந்துள்ள மாருதி நகர் பகுதியில் சுமார் 54 ஏக்கர் பரப்பளவிலான மைதானம் தேர்வு செய்யப்பட்டுள்ளது. அங்கு மேடை மற்றும் பிரம்மாண்ட பந்தல் அமைக்கும் பணிகள் நிறைவடையும் தருவாயில் உள்ளன.

காவல் துறை கட்டுப்பாடுகள் மற்றும் பாதுகாப்பு வழிமுறைகளின் படி, இந்த பொதுக்கூட்டத்தில் 10,000 பேர் மட்டுமே பங்கேற்க அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. எனினும், பொது மக்கள் மற்றும் தொண்டர்கள் அதிகளவில் திரள்வார்கள் என எதிர்பார்க்கப்படுவதால், அசம்பாவிதங்களைத் தவிர்க்கும் பொருட்டு சுமார் 7,000 போலீஸார் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட உள்ளனர்.

கூட்டத்துக்கான மின் வசதி, குடிநீர், மருத்துவக் குழுக்கள் மற்றும் போக்கு



வரத்து மாற்றங்கள் தொடர்பான ஏற்பாடுகளை மாவட்ட நிர்வாகம் மற்றும் காவல் துறை மேற்கொண்டு வருகிறது.

போக்குவரத்து மாற்றம்: முதல்வர் விஜய் இன்று தாராபுரத்தில் பிரச்சாரம் மேற்கொள்வதால், லாரி உள்ளிட்ட கனரக வாகனங்களுக்கு மட்டும் போக்குவரத்து மாற்றம் செய்யப்பட்டுள்ளது. பேருந்து, கார், இருசக்கர வாகனங்கள் வழக்கம் போல் தாராபுரம் வரலாம்.

அதன்படி, ஒட்டன்சத்திரம் வழியாக வரும் கனரக வாகனங்கள் உடுமலை பொள்ளாச்சி வழியாகவும், கரூர் வழியாக வரும் கனரக வாகனங்கள் பழநி பொள்ளாச்சி வழியாகவும் செல்லலாம். திருப்பூரில் இருந்து தென் மாவட்டங்களுக்கு செல்லும் வாகனங்களுக்கு சில பகுதிகளில் தற்காலிக போக்குவரத்து மாற்றம் செய்ய வாய்ப்பு உள்ளதாக போலீஸார் தெரிவித்துள்ளனர்.

## காரில் தொங்கியபடி குட்கா கடத்தலைப் போராடி தடுத்த தலைமைக் காவலருக்கு முதல்வர் விஜய் பாராட்டு

கோவையில் குட்கா கடத்தலைத் தடுக்க உயிரைப் பணயம் வைத்து கார் மீது தொற்றி சென்ற தலைமைக் காவலர் வேல்முருகனை, முதல்வர் விஜய் நேரில் அழைத்துப் பாராட்டி பரிசும் வழங்கினார்.

கோவை அருகே கோவில்பாளையம் பகுதியில் கடந்த 27ம் தேதி காலை போலீஸார் வாகனத் தணிக்கையில் ஈடுபட்டிருந்தனர். அப்போது கர்நாடக மாநில பதிவெண் கொண்ட சொகுசு கார் ஒன்று வந்தது. அங்கிருந்த தலைமை காவலர் வேல்முருகன் தலைமையிலான போலீஸார் காரை சோதனை செய்தனர். அப்போது காரில் 3 பேர் இருந்தனர். காரின் பின்பக்கம் சில மூட்டைகள் இருந்தன.

போலீஸார் காரை சோதித்துக் கொண்டிருந்த போது, கண்ணிமைக்கும் நேரத்தில் கார் வேகமாக சென்றது. சுதாரித்துக் கொண்ட தலைமைக் காவலர் வேல்முருகன் காரின் மீது சட்டென்று குதித்து காரின் மேல் ஏறினார். வாகனம் நிற்காமல் சென்றதால், காரின் மேல் பகுதியில் படுத்துக் கொண்டு அதில் இருந்த பிடியை இறுக்கமாக பற்றிக் கொண்டார்.

கோவை சேலம் தேசிய நெடுஞ்சாலையில் கார் அசுர வேகத்தில் பறந்தது. நெடுஞ்சாலையில் சென்ற வாகன ஓட்டிகள் அதைப் பார்த்து அதிர்ச்சி அடைந்தனர். சோதனைச் சாவடியில் இருந்த சக போலீஸார் கோவை மற்றும் திருப்பூர் மாவட்ட போலீஸாரை உஷார்படுத்தினர். காலை நேரத்தில் போக்குவரத்து நெரிசல் குறைவாக இருந்ததால் கார் வேகமாக சென்றது. மேலும் விளாங்குறிச்சி, கணியூர் சுங்கச்சாவடிகளிலும் நிற்காமல் சென்றது. இதையடுத்து அவிநாசி போலீஸாருக்கு கோவை போலீஸார் தகவல் அளித்தனர். அவர்கள் முன்னெச்சரிக்கையாகத் திருப்பூர் மாவட்டம் அவிநாசி அருகே தேசிய நெடுஞ்சாலையில் மற்ற வாகனங்களை நிறுத்தி போக்குவரத்து நெரிசலை செயற்கையாக உண்டாக்கினர். அப்போது காரில் வந்த கும்பல், போக்குவரத்து நெரிசலில் சிக்கியது. இதையடுத்து காரை நிறுத்திவிட்டு 3 பேரும் இறங்கிஓடமுயன்றனர். அவர்களை அங்கு காத்துக் கொண்டிருந்த போலீஸார் சுற்றி வளைத்து பிடித்தனர்.



காரில் மேல் பகுதியில் குற்றவாளிகளைத் துணிச்சலாகப் பிடிக்க முயன்ற தலைமைக் காவலர் வேல்முருகனையும் மீட்டனர். தொடர்ந்து 3 பேரிடம் போலீஸார் விசாரித்த போது, அவர்கள் ராஜஸ்தான் மாநிலத்தைச் சேர்ந்தவர்கள் என்பதும், கர்நாடக மாநிலம் பெங்களூருவில் இருந்து புகையிலைப் பொருட்களைக் கடத்தி வந்து கோவையில் விற்பனை செய்ய முயன்றதும் கண்டறியப்பட்டது. இதையடுத்து சுரேஷ் (20), ராஜேஷ் (23), பாபாதரம் (27) ஆகிய 3 பேரையும் போலீஸார் கைது செய்தனர். அவர்கள் காரில் வைத்திருந்த 233 கிலோ புகையிலை பொருட்களைப் பறிமுதல் செய்தனர். தலைமைக் காவலர் வேல்முருகன் (38) சுமார் 40 கி.மீ. தூரம் உயிரைப் பணயம் வைத்து, தடை செய்யப்பட்ட புகையிலைப் பொருட்களைப் பிடித்த சம்பவம் தமிழகம் முழுவதும் பரபரப்பை ஏற்படுத்தியது. இந்நிலையில், உயிரைப் பணயம் வைத்து குட்கா கடத்தலைத் தடுத்த தலைமைக் காவலர் வேல்முருகனை நேரில் அழைத்து முதல்வர் விஜய் பாராட்டினார்.

இதுகுறித்து தமிழக அரசு நேற்று வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளதாவது: கோயம்புத்தூர் மாவட்டம், கணியூர்சுங்கச்சாவடி அருகே கடந்த 27ம் தேதி, தடை செய்யப்பட்ட போதைப் பொருட்களை கடத்திச் செல்லும் போது தலைமைக் காவலர் ம.வேல்முருகன், கண் இமைக்கும் நேரத்தில் அந்தக் காரின் மேற்கூரையின் மீது தாவி ஏறினார்.

காரின் மேற்கூரையில் காவலர் தொற்றிக் கொண்டிருப்பதைப் பொருட்படுத்தாமல், கடத்தல்காரர்கள் காரை அதிவேகமாக ஓட்டிச் சென்றனர். விளாங்குறிச்சியில் இருந்து அவிநாசி வரை சுமார் 40 கி.மீ. தூரத்துக்குத் தனது உயிரைப் பணயம் வைத்து காரின் மேற்கூரையில் படுத்தபடியே காவலர் வேல்முருகன் பயணம் செய்தார். பின்னர், கூடுதல் போலீஸார் விரைந்து வந்து அந்தக் காரை மடக்கிப் பிடித்தனர். தலைமைக் காவலர் வேல்முருகனின் இந்தத் துணிச்சலான செயல், காவல் துறையினராலும் பொதுமக்களாலும் வெகுவாகப் பாராட்டப்பட்டது.

உயிரைப் பணயம் வைத்து கடத்தல்காரர்களைப் பிடிக்கக் காரணமாக இருந்த தலைமைக் காவலர் வேல்முருகனை, முதல்வர் விஜய் நேற்று தலைமைச் செயலகத்துக்கு நேரில் அழைத்துப் பாராட்டினார். அவருக்குப் பரிசு வழங்கி கவுரவித்த முதல்வர், பணியின் போது கவனமாகவும் பாதுகாப்பாகவும் செயல்பட வேண்டும் எனவும் அறிவுறுத்தினார். இந்நிகழ்வின் போது டிஜிபி மகேஷ் குமார் அகர்வால் உடனிருந்தார். இவ்வாறு அரசு செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

# தலைமைத் தேர்தல் ஆணையருக்கு எதிராக காங்கிரஸ் கொந்தளிப்பு

## திருவண்ணாமலையில் உருவ பொம்மை எரிப்பு!

திருவண்ணாமலை : செப்.30 தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமாருக்கு எதிராக பல்வேறு குற்றச்சாட்டுகளை முன் வைத்து திருவண்ணாமலை அண்ணா சிலை அருகே நேற்று முன்தினம் காங்கிரஸ் கட்சி சார்பில் நடைபெற்ற கண்டன ஆர்ப்பாட்டத்தில், அவரது ஆர்ப்பாட்டத்தில், கட்சியின் நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் ஏராளமானோர் கலந்து கொண்டனர். அவர்கள் தலைமைத் தேர்தல் ஆணையர் மற்றும் மத்திய அரசுக்கு எதிராக கண்டன முழக்கங்களை எழுப்பினர். மேலும், தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமாரை கைது காப்புப் பணியில் ஈடுபட்டிருந்த போலீசார் உடனடியாக நடவடிக்கை மேற்கொண்டனர். எரிந்து கொண்டிருந்த உருவ பொம்மையின் மீது தண்ணீரூற்றிநீயைஅணைக்க போலீசார் முயன்றனர். அப்போது உருவ பொம்மையை திருப்பிப் போட்டபோது, அதில் மீண்டும் தீப்பற்றி எரியத் தொடங்கியது. இதனால் அருகில்



உருவ பொம்மை எரிக்கப்பட்டதால் பரபரப்பு ஏற்பட்டது.

தேர்தல் நடவடிக்கைகள் தொடர்பாக தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமார் மீது காங்கிரஸ் கட்சியினர் குற்றச்சாட்டுகளை முன் வைத்து வருகின்றனர். இதன் தொடர்ச்சியாக, அவரை கண்டித்தும், அவரது தலைமையில் எடுக்கப்பட்டதாகக் கூறப்படும் முடிவுகளை மறுபரிசீலனை செய்ய வலியுறுத்தியும் இந்த ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

திருவண்ணாமலை மாவட்ட காங்கிரஸ் தலைவர் குணசேகரன் தலைமையில் நடைபெற்ற செய்ய வேண்டும், அவரது தலைமையில் எடுக்கப்பட்ட முடிவுகளை மறுபரிசீலனை செய்ய வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி காங்கிரசார் முழக்கங்களை எழுப்பினர்.

உருவ பொம்மை எரிப்பு ஆர்ப்பாட்டம் நடைபெற்றுக் கொண்டிருந்த போது, திடீரென காங்கிரஸ் நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமாரின் உருவ பொம்மையை எரித்தனர். மேலும், உருவ பொம்மையை காலணியால் அடித்ததாகவும் கூறப்படுகிறது. இதனால் அங்கு பாதுகாப்புப் பணியில் இருந்த போலீசாருக்கு தீக்காயம் ஏற்படும் அபாயம் ஏற்பட்டது. சுதாரித்துக் கொண்ட போலீசார், எரிந்து கொண்டிருந்த உருவ பொம்மையை உடனடியாக அணைத்தனர்.

இந்த சம்பவத்தால் ஆர்ப்பாட்டம் நடைபெற்ற அண்ணா சிலை பகுதியில் சிறிது நேரம் பரபரப்பு ஏற்பட்டது.

இந்த ஆர்ப்பாட்டத்தில் முன்னாள் மாவட்டத் தலைவர் செங்கம் குமார், மாநகரத் தலைவர் வெற்றிச்செல்வன் உள்ளிட்ட காங்கிரஸ் கட்சி நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.



## அகில இந்திய லெஜெண்ட் சரவணன் ரசிகர் நற்பணி மன்ற தலைமை ஊடக பிரிவு சார்பில் வெளியாகும் லீடர் வார இதழினை லெஜெண்ட் சரவணன் வெளியிட்டார்

செங்குன்றம், செப்டம்பர் 30

அகில இந்திய லெஜெண்ட் சரவணன் ரசிகர் நற்பணி மன்றதலைமைஊடகபிரிவின்மலர்வெளியீட்டுவிழா அகில இந்திய லெஜெண்ட் சரவணன் ரசிகர் நற்பணி மன்ற தலைவர் டி.முத்து துரை ஏற்பாட்டில் நடிகரும் தயாரிப்பாளரும் தொழிலதிபருமான லெஜெண்ட் சரவணன் லீடர் (வார இதழ்) முதல் பிரதியை வெளியிட, தலைமை ஊடக பிரிவு தலைவர் டி.ஆர். பாலாஜி, தலைவி எல்.ராஜேஸ்வரி ஆகியோர் முதல் பிரதியை பெற்றுக்கொண்டனர். இவ்விழாவில் மாநில ஊடக பிரிவு நிர்வாகிகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

## மதுராந்தகம் கிளியா நகரில் மாவட்டச் செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் தலைமையில் திமுக நிர்வாகிகள் தீவிர வாக்கு சேகரிப்பு





செங்குன்றம், செப்டம்பர் 30

மதுராந்தகம் இடைத்தேர்தல் அச்சிறுபாக்கம் ஒன்றியம் கிளியா நகர் ஊராட்சியில் சென்னை வடகிழக்கு மாவட்ட செயலாளரும் முன்னாள் மாதவரம் சட்ட மன்ற உறுப்பினருமான மாதவரம் எஸ்.சுதர்சனம் தலைமையில் திருவொற்றியூர் மத்திய பகுதிச் செயலாளரும் மணலி மண்டலக் குழுத் தலைவருமான ஏ.வி. ஆறுமுகம் உள்ளிட்ட திமுக நிர்வாகிகள் வீடு வீடாக சென்று வாக்காளர்களை சந்தித்து திமுக ஆட்சியில் செய்த சாதனைகளையும் தவெக ஆட்சியின் அவலங்களையும் விளக்கி கூறி திமுக வேட்பாளர் இ.பரந்தாமனை ஆதரித்து உதயசூரியன் சின்னத்திற்கு வாக்களிக்க தீவிர வாக்கு சேகரித்தனர்.

**திண்டுக்கல் மாவட்டம் பழனியில் திடக்கழிவு மேலாண்மை விதிகளை செயல்படுத்தும் வகையில் குப்பைகளை நான்கு வகையாக நான்கு கூடைகளில் குப்பைகளை பிரித்து வழங்குவது சம்பந்தமாக பொது மக்களிடம் பழனி நகராட்சி ஆணைய பொது மக்களிடம் நேரில் சென்று தங்கள் வீடுகளில் இருந்து குப்பை வண்டியில் பெரிய கொட்டும்போது இனிமேல் குப்பை வண்டியில் குப்பைகளை போடும்போது நான்கு வகைகளாக பிரித்து குப்பை வண்டியில் தங்கள் வீடுகளிலிருந்து வரும் கழிவு குப்பைகளை தரம் பிரித்து கொட்டுமாறு பொதுமக்களுக்கு நகராட்சி ஆணையர் கேட்டுக்கொண்டார். அப்பொழுது நகராட்சி அதிகாரிகள் மற்றும் நகராட்சி ஊழியர்கள் உடன் இருந்தன**

### திண்டுக்கல் வழக்கறிஞர் சங்கம் சார்பாக

## வழக்கறிஞர்கள் காலவரையற்ற நீதிமன்ற புறக்கணிப்பு

திண்டுக்கல் குடும்பநல நீதிமன்ற நீதிபதி மற்றும் திண்டுக்கல் மாவட்ட கூடுதல் உரிமையியல் நீதிமன்ற நீதிபதி ஆகிய இருவரையும் பணியிட மாறுதல் செய்யும் வரை வழக்கறிஞர்கள் நீதிமன்ற புறக்கணிப்பு போராட்டத்தில் ஈடுபடுவதாகவும் திண்டுக்கல் ஒருங்கிணைந்தநீதிமன்றம் முன்பு வருகின்ற 5ம் தேதி வாயில் கருப்பு துணி கட்டிபோராட்டம் நடத்துவதாக திண்டுக்கல் வழக்கறிஞர் சங்க தலைவர் குமரேசன் செயலாளர் சரவணன் ஆகியோர் கூட்டாக தெரிவித்தனர்

## இறப்புக்கு முன் ரத்த தானம் இறப்புக்கு பின் கண் தானம்

# அரசு வேலை வாங்கித் தருவதாக ரூ.2 லட்சம் பெற்றதாக புகார்

## தமிழக வாழ்வுரிமைக் கட்சி நிர்வாகி மீது இளைஞர் எஸ்.பி. அலுவலகத்தில் பரபரப்பு புகார்

திருவண்ணாமலை, செப்.30: அரசு வேலை வாங்கித் தருவதாகக் கூறி தன்னிடம் ரூ.2 லட்சம் பெற்றுக்கொண்டு, வேலை வாங்கித் தராமலும் பணத்தை திருப்பித் தராமலும் மிரட்டல் விடுப்பதாக தமிழக வாழ்வுரிமைக் கட்சி நிர்வாகி மீது இளைஞர் ஒருவர்திருவண்ணாமலை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்




தில் புகார் அளித்துள்ளார்.

விழுப்புரம் மாவட்டம் விக்கிரவாண்டி வட்டம் நந்திவாடி கிராமத்தைச் சேர்ந்த சதீஷ் என்பவர் அளித்துள்ள புகார் மனுவில் கூறியிருப்பதாவது:

திருவண்ணாமலை தாலுகா தச்சம்பட்டு அருகே உள்ள இருதயபுரம் கிராமத்தைச் சேர்ந்த தமிழக வாழ்வுரிமைக்கட்சியின்மாநில செயற்குழு உறுப்பினர் யேசுராஜ் என்பவர் தனக்கு அறிமுகமானதாகவும், அப்போது கிராம நிர்வாக உதவியாளர் பணியை வாங்கித் தருவதாகஅவர்கூறியதாகவும் தெரிவித்துள்ளார்.

அவரது வார்த்தைகளை நம்பி சதீஷ் ரூ.2 லட்சம் பணத்தை வழங்கியதாகவும், பணம் கொடுத்து சுமார் 3 ஆண்டுகள் கடந்த நிலையில் இதுவரை வேலை வாங்கித் தரப்படவில்லை என்றும் புகாரில் கூறப்பட்டுள்ளது.

இதையடுத்து தான் வழங்கிய ரூ.2 லட்சத்தை திருப்பித் தருமாறு கேட்ட போது, பணத்தை திருப்பித்தர மறுத்ததுடன், பணத்தை மீண்டும் கேட்டால் கொலை செய்து விடுவதாக மிரட்டல் விடுத்ததாகவும் சதீஷ் தனது புகார் மனுவில் தெரிவித்துள்ளார்.

இதனால் அதிர்ச்சியடைந்த சதீஷ், திருவண்ணாமலை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்திற்கு நேரில் சென்று புகார் மனு அளித்தார்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய சதீஷ், தான் ஏழ்மையான குடும்பத்தைச் சேர்ந்தவர் என்றும், கடன் வாங்கி ரூ.2 லட்சத்தை வழங்கியதாகவும் தெரிவித்தார். ஆனால், 3 ஆண்டுகள் கடந்தும் வேலை கிடைக்காத நிலையில், தான் வழங்கிய பணத்தையும் திரும்பப்பெறமுடியாமல் தவித்து வருவதாக வேதனை தெரிவித்தார்.

மேலும், தன்னிடம் பெறப்பட்டதாகக் கூறப்படும் ரூ.2 லட்சத்தை மீட்டுத் தருவதுடன், தன்னை மிரட்டியதாகக்கூறப்படும் நபர் மீது உரிய சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் காவல்துறையிடம் அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

இந்த புகார் தொடர்பாக காவல்துறையினர் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

புகாரில் கூறப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளின் உண்மைத் தன்மை மற்றும் பணம் பெறப்பட்டதா என்பது உள்ளிட்ட விவரங்கள் குறித்து விசாரணைக்குப் பிறகே முழுமையான தகவல்கள் தெரியவரும். இதுதொடர்பாக யேசுராஜின் தரப்பு விளக்கம் இதுவரை வெளியாகவில்லை.

# தீபாவளிக்கு களைகட்டும் கோஆப்டெக்ஸ் விற்பனை! கைத்தறி பட்டு, பருத்தி ரகங்களுக்கு 30% சிறப்பு தள்ளுபடி

திருவண்ணாமலை: செப்.30 தீபாவளி பண்டிகையை முன்னிட்டு திருவண்ணாமலை காமாட்சி அம்மன் கோவில் அருகே உள்ள கோஆப்டெக்ஸ் விற்பனை நிலையத்தில் கைத்தறி ஆடைகள் மற்றும் துணி ரகங்களுக்கு 30% சிறப்பு தள்ளுபடி விற்பனை தொடங்கியது.

திருவண்ணாமலை மாவட்ட ஆட்சியர் வந்தனா கார்க், இன்று (28.09.2026) கோஆப்டெக்ஸ் விற்பனை நிலையத்தில் குத்துவிளக்கேற்றி தீபாவளி சிறப்பு தள்ளுபடி விற்பனையை தொடங்கிவைத்து, அங்கு காட்சிப்படுத்தப்பட்டிருந்த பல்வேறு கைத்தறி சேலை ரகங்களை பார்வையிட்டார்.

91 ஆண்டுகளாக மக்கள் சேவையில் கோஆப்டெக்ஸ் தமிழ்நாடு கைத்தறி



நெசவாளர் கூட்டுறவு சங்கமான கோஆப்டெக்ஸ், 1935ம் ஆண்டு தொடங்கப்பட்டு, தொடர்ந்து 91 ஆண்டுகளாக வாடிக்கையாளர்களுக்கு கைத்தறி பொருட்களை வழங்கி வருகிறது.

வாடிக்கையாளர்களின் மாறிவரும் ரசனை மற்றும் தேவைகளுக்கு ஏற்ப, புதிய வடிவமைப்புகள் மற்றும் வண்ணங்களில் பல்வேறு கைத்தறி ரகங்கள் உற்பத்தி செய்யப்பட்டு விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ளன.

2025,26ம் ஆண்டில் கோஆப்டெக்ஸ் வேலூர் மண்டலத்தில் சுமார் ₹21 கோடி மதிப்பிலான சில்லறை விற்பனை மேற்கொண்டுள்ளது. கடந்த தீபாவளி பண்டிகையின் போது வேலூர் மண்டலத்தில் சுமார் ₹7.38 கோடி விற்பனை நடைபெற்ற நிலையில், இந்த ஆண்டு தீபாவளிக்கு ₹10 கோடி விற்பனை இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

திருவண்ணாமலை கோஆப்டெக்ஸ் விற்பனை நிலையம் கடந்த தீபாவளியில் ₹87 லட்சம் மதிப்பிலான விற்பனையை பதிவு செய்த நிலையில், இந்த ஆண்டு தீபாவளிக்கு ₹1.25 கோடி விற்பனை இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் கைத்தறி நெசவாளர்களுக்கு தொடர்ந்து வேலை வாய்ப்பு கிடைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

பட்டு, பருத்தி ரகங்களுக்கு 30% தள்ளுபடி கைத்தறி பொருட்களின் விற்பனையை ஊக்குவிக்கும் வகையில், தமிழக அரசு பண்டிகை காலங்களில் ஆண்டுதோறும் சிறப்பு தள்ளுபடி வழங்கி வருகிறது. அதன்படி, இந்த ஆண்டு தீபாவளியை முன்னிட்டு அனைத்து பட்டு மற்றும் பருத்தி கைத்தறி ரகங்களுக்கும் 30% சிறப்பு தள்ளுபடி வழங்கப்படுகிறது.

தீபாவளிக்காக புதிய வண்ணங்கள் மற்றும் வடிவமைப்புகளில் காஞ்சிபுரம், ஆரணி, திருபுவனம், சேலம்பட்டு சேலைகள், கோவை மற்றும் பழனி மென்பட்டு சேலைகள், கோவை, அருப்புக்கோட்டை, திண்டுக்கல், பரமக்குடி, மணமேடு, நெகமம், உறையூர், சேலம், காரைக்குடி உள்ளிட்ட பகுதிகளின் பருத்தி சேலைகள் விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ளன.

மேலும், திண்டுக்கல் இயற்கை முறையில் தயாரிக்கப்பட்ட சேலைகள், குர்திகள், சுடிதார் ரகங்கள், வேட்டிகள், ஆயத்த சட்டைகள், குர்தாக்கள், லுங்கிகள், போர்வைகள், துண்டுகள், கைக்குட்டைகள், திரைச்சீலைகள் உள்ளிட்ட ஏராளமான கைத்தறி மற்றும் துணி ரகங்களும் வாடிக்கையாளர்களின் வசதிக்காக காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

புதிய வரவுகளுக்கு தனி வரவேற்பு இந்த ஆண்டு புதிய வரவுகளாக சுருக்கம் ஏற்படாத சட்டைகள், மகளிருக்கானநவீன ஆடைகள், சிறுமிகளுக்கான வண்ணமயமான பாவாடை-சட்டைகள், மூங்கில் இழைகளால் நெய்யப்பட்ட துண்டுகள் உள்ளிட்ட பல்வேறு புதிய ரகங்களும் விற்பனைக்கு வந்துள்ளன.

கோஆப்டெக்ஸின் மாதாந்திர சேமிப்புத் திட்டம் ₹300 முதல் தொடங்குகிறது. மேலும், வாடிக்கையாளர்கள் வீட்டிலிருந்தபடியே பொருட்களை வாங்கும் வகையில் கோஆப்டெக்ஸின் இணையவழி விற்பனையும் நடைபெற்று வருகிறது.

அரசு ஊழியர்களுக்கு வட்டியில்லா கடன் வசதி தீபாவளியை முன்னிட்டு, 30% சிறப்பு தள்ளுபடியுடன் அரசு ஊழியர்களுக்கு வட்டியில்லா கடன் விற்பனை வசதியும் தொடர்ந்து வழங்கப்படுகிறது.

அரசு ஊழியர்கள் இந்த வசதியைப் பயன்படுத்தி தங்களது குடும்பத்தினருக்குத் தேவையான கைத்தறி துணி ரகங்களை வாங்கி, தீபாவளியை மகிழ்ச்சியுடன் கொண்டாடுமாறு கோஆப்டெக்ஸ் நிர்வாகம் கேட்டுக் கொண்டுள்ளது.

வாடிக்கையாளர்கள் அதிகளவில் பயன்பெறும் வகையில், அனைத்து விடுமுறை நாட்களிலும் விற்பனை நிலையம் செயல்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்விழாவில் திருவண்ணாமலை வருவாய் கோட்டாட்சியர் செல்வம், மண்டல மேலாளர் பெ. ஸ்டாலின், கோஆப்டெக்ஸ் மேலாளர் (வடிவமைப்பு மற்றும் உற்பத்தி) வ.ர. விஜயகுமார், ரக மேலாளர் ச. பெருமாள், விற்பனை நிலைய மேலாளர் ம. குமரவேல் உள்ளிட்டோர் மற்றும் ஏராளமான வாடிக்கையாளர்கள் கலந்து கொண்டனர்.

# இராணிப்பேட்டையில் முதலமைச்சர் கோப்பை 2026 விளையாட்டுப் போட்டிகள்




இராணிப்பேட்டை அரசினர் மேல்நிலைப் பள்ளி விளையாட்டு மைதானத்தில் முதலமைச்சர் கோப்பை 2026 விளையாட்டுப் போட்டியில் 29.09.26 செவ்வாய் கிழமை அரசு ஊழியர்களுக்கான பெண்கள் பிரிவினருக்கான தடகளம் போட்டிகள் நடைபெற்றன.

அரசு ஊழியர்களுக்கான பெண்கள் பிரிவில் முதல் மூன்று இடங்களை பிடித்த வெற்றியாளர்களுக்கு சான்றிதழ் மற்றும் பதக்கங்களை இராணிப்பேட்டை மாவட்ட விளையாட்டு மற்றும் இளைஞர் நலன் அலுவலர் ச.ஞானசேகரன் அவர்கள் வழங்கினார்.

# பழனி பேருந்து நிலையத்தில் தனியார் இருசக்கர மற்றும் நான்கு சக்கர வாகனங்கள் நுழைய தடை

## பழனி டிஎஸ்பி தேவராஜ் அதிரடி நடவடிக்கை

பழனி பேருந்து நிலையத்தில் இன்று முதல் இரு சக்கர, நான்கு சக்கர வாகனங்களுக்கு தடை விபத்து மற்றும் போக்குவரத்து நெரிசலைத் தடுக்கும் வகையில் புதிய திட்டம்

பழனி பேருந்து நிலையத்தில் விபத்து மற்றும் போக்குவரத்து நெரிசலைத் தடுக்கும் வகையில் புதிய கட்டுப்பாடுகள் இன்று முதல் அமல்படுத்தப்பட்டுள்ளன.

இதன்படி, பழனி பேருந்துநிலையத்திற்குள் இருசக்கர மற்றும் நான்கு சக்கரவாகனங்கள்நுழைய தடை விதிக்க ப்பட்டுள்ளது. இந்த புதிய நடைமுறையை பழனி உட் கோட்ட காவல் துணை கண்காணிப்பாளர் திரு. தேவராஜ் அவர்கள் உத்தரவின் பேரில் காவல்துறையினர் செயல்படுத்தி வருகின்றனர்.




பேருந்து நிலையத்திற்குள் அதிக அளவில் வாகனங்கள் செல்வதால் ஏற்படும் போக்குவரத்து நெரிசல் மற்றும் விபத்துகளை கட்டுப்படுத்தும் நோக்கில் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக காவல்துறை தரப்பில் தெரிவிக்கப்ப ட்டுள்ளது.

அதேவேளை, அத்தியாவசிய பணிகளுக்காக காவல் துறை வாகனங்கள், ஆம்புலன்ஸ், தீயணைப்புத்துறை வாகனங்கள் மற்றும் பத்திரிகையாளர்களின் வாகனங்களுக்கு அனுமதி வழங்கப்படும் என தெரிவிக்கப் பட்டுள்ளது. விபத்தில்லாத பழனியை உருவாக்கவும், பொதுமக்களின் பாதுகாப்பை உறுதி செய்யவும் பொதுமக்கள் அனைவரும் காவல்துறையினருடன் இணைந்து முழு ஒத்துழைப்பு வழங்குமாறு காவல்துறை சார்பில் கேட்டுக்கொள்ளப் பட்டுள்ளது.

# "குழந்தை திருமணத்தை தடுத்து பெண் குழந்தைகளின் கனவுகளை காப்போம்!" பெற்றோரிடம் விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும்

## ஆட்சியர் வந்தனா கார்க் அதிரடி அறிவுறுத்தல்

திருவண்ணாமலை, செப்.30

பெண் குழந்தைகளின் கல்வி மற்றும் எதிர்காலத்தை பாதிக்கும் குழந்தை திருமணங்களை தடுக்க அனைவரும் தீவிரமாக செயல்பட வேண்டும் என்றும், குழந்தைகளின் உயர் கல்வி, உடல் மற்றும் மன நலன் குறித்து பெற்றோரிடம் தொடர்ந்து விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும் என்றும் ஆட்சியர் வந்தனா கார்க் வலியுறுத்தினார்.

திருவண்ணாமலை மாநகராட்சியில் உள்ள கலைஞர் பல்நோக்கு அரங்கத்தில் குழந்தைகள் நலன் மற்றும் சிறப்பு சேவைகள் துறை சார்பில் அங்கன்வாடி பணியாளர்கள், கிராம செவிலியர்கள் மற்றும் கிராம அளவிலான கூட்டமைப்பு (மகளிர் திட்டம்) பொறுப்பாளர்களுக்கான ஒரு நாள் திறன் வளர்ப்பு பயிற்சி நடைபெற்றது. பயிற்சியை ஆட்சியர் வந்தனா கார்க் தொடங்கி வைத்து சிறப்புரையாற்றினார்.

மாவட்டத்தில் குழந்தைகளின் நலன் மற்றும் திறன் மேம்பாட்டை கருத்தில் கொண்டு நடைபெற்ற இந்த பயிற்சியில் 200க்கும் மேற்பட்ட அங்கன்வாடி பணியாளர்கள், கிராம செவிலியர்கள் மற்றும் கிராம அளவிலான கூட்டமைப்பு பொறுப்பாளர்கள் பங்கேற்றனர்.

நிகழ்ச்சியில் ஆட்சியர் பேசியதாவது:

"பெண் குழந்தைகளுக்கு சிறு வயதிலேயே திருமணம் நடைபெறுவதால் அவர்களின் கல்வி பாதிக்கப்படுகிறது. குழந்தை திருமணத்தால் சிறு வயதிலேயே பிரசவிக்கும் சூழல் ஏற்பட்டு, குழந்தையை பராமரிக்கும் பொறுப்பும் அவர்களுக்கு வந்து விடுகிறது. இதனால் அவர்களின் எதிர்கால கனவுகளும், உயர்கல்வி வாய்ப்புகளும் பாதிக்கப்படுகின்றன.

குழந்தை திருமணங்களை தடுக்க மாவட்ட நிர்வாகம் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. இந்த பயிற்சியில் பங்கேற்றுள்ள அனைவரும் குழந்தைகளின் திறனை மேம்படுத்துவதுடன், அவர்களின் பெற்றோரிடமும் உயர்கல்வியின் முக்கியத்துவம், எதிர்காலத்தை சிறப்பாக அமைத்துக்கொள்வது, உடல் மற்றும் மனநலனை பாதுகாப்பது குறித்து தொடர்ந்து விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும்.

பெண்களின் பொருளாதார முன்னேற்றத்திற்காக அரசு சார்பில் மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு கடனுதவிகள் வழங்கப்படுகின்றன. அவற்றை முறையாக பயன்படுத்தி பொருளாதாரத்தை மேம்படுத்திக் கொள்ள வேண்டும். இதற்காக தமிழ்நாடு அரசு மற்றும்மாவட்டநிர்வாகம் சார்பில்பல்வேறுதொழில் பயிற்சிகளும் வழங்கப் பட்டுவருகின்றன. பயிற்சி பெற்று, குழுக்களாக ஒருங்கிணைந்து, கடனுதவிகளை பெற்று பொருளாதாரத்தை மேம்படுத்திக் கொள்ளலாம்.

இந்த ஒரு நாள் பயிற்சியை அனைவரும் முழுமையாக பயன்படுத்திக் கொண்டு, மாவட்டத்தில் உள்ள குழந்தைகளின் நலனை பாதுகாக்கவும், அவர்களின் எதிர்காலத்தை சிறப்பாக அமைக்கவும் சிறப்பாக செயல்பட வேண்டும்" என்று கேட்டுக்கொண்டார்.






தொடர்ந்து, பெண்குழந்தைகளின் நலன் மற்றும் பாதுகாப்பு குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் தயாரிக்கப்பட்ட விழிப்புணர்வு வாசகங்கள் அடங்கிய பதாகைகளை ஆட்சியர் வெளியிட்டார்.

நிகழ்ச்சியில் மாவட்ட சமூக நல அலுவலர் கோமதி, மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர் செல்வம், ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்ட மாவட்ட திட்ட அலுவலர் அன்பரசி, குழந்தைகள் நலக் குழு தலைவர் முருகன் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# மதுராந்தகம் கிளியா நகரில் மாவட்டச் செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் தலைமையில் விளையாட்டு வீரர்கள், பொதுமக்களிடம் தீவிர வாக்கு சேகரிப்பு

செங்குனறம், செப்டம்பர் 30

மதுராந்தகம் இடைத் தேர்தல் அச்சிறுபாக்கம் ஒன்றியம் கிளியா நகர் ஊராட்சியில் சென்னை வடகிழக்கு மாவட்ட செயலாளரும் முன்னாள் மாதவரம் சட்டமன்ற உறுப்பினருமான மாதவரம் எஸ். சுதர்சனம் தலைமையில் திருவொற்றியூர் மேற்குப் பகுதி செயலாளர் வை.ம.அருள்தாசன் உள்ளிட்ட திமுக நிர்வாகிகள் விளையாட்டு வீரர்களிடமும், பொதுமக்களிடமும் வீடு வீடாக சென்று வாக்காளர்களை சந்தித்து மு.க. ஸ்டாலினின்திராவிட மாடல் ஆட்சியில் செய்த சாதனைகளையும் இன்றைய தவெக ஆட்சியின் அவலங்களையும் துயரங்களையும், விலைவாசி உயர்வு உள்ளிட்ட மக்கள் பிரச்னைகளை எடுத்துக் கூறி திமுக வேட்பாளர் இ.பரந்தாமனை ஆதரித்து உதயசூரியன் சின்னத்திற்கு தீவிர வாக்கு சேகரித்தனர்.









# மதுராந்தகம் சின்னவெண்மணியில் அதிமுக நிர்வாகிகள் தீவிர வாக்கு சேகரிப்பு

செங்குன்றம், செப்டம்பர் 30:

மதுராந்தகம் இடைத்தேர்தல் சித்தாமூர் ஒன்றியம் சின்னவெண்மணி ஊராட்சியில் முன்னாள் பால்வளத்துறை அமைச்சரும் திருவள்ளூர் கிழக்கு மாவட்ட செயலாளருமான மாதவரம் வி.மூர்த்தி ஆலோசனைபடி மாதவரம் பகுதி செயலாளர் வேலாயுதம் மற்றும் புழல் ஒன்றிய செயலாளர் ஆர்.சுப்பிரமணி ஆகியோர் தலைமையில் வீடு வீடாக சென்று வாக்காளர்களை சந்தித்து அதிமுக ஆட்சியில் செய்த சாதனைகளை விளக்கி கூறி அதிமுக வேட்பாளர் கணிதாசம்பத்தை ஆதரித்து இரட்டை இலை சின்னத்திற்கு வாக்களிக்க வேண்டி தீவிர வாக்குகளை சேகரித்தனர்.





# பாடியநல்லூர் பேரூராட்சி தவெக அலுவலகம் திறப்பு விழா, நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி

செங்குன்றம், செப்டம்பர் 30:

தமிழக வெற்றிக் கழகம் திருவள்ளூர் தென்மேற்கு மாவட்டத்திற்குட்பட்ட செங்குன்றம் அடுத்த பாடியநல்லூரில் நடைபெற்ற பாடியநல்லூர் பேரூராட்சி தவெக அலுவலகம் திறப்பு விழா, மாதந்தோறும் ஏழை எளியோருக்கு அரிசி உள்ளிட்ட நலத்திட்ட உதவிகளும் அன்னதானம்வழங்கும்நிகழ்ச்சிக்குதவெகதிருவள்ளூர் தென்மேற்கு மாவட்ட செயலாளரும் மாதவரம் சட்டமன்ற உறுப்பினருமான எம்.எல். விஜய் பிரபு தலைமையேற்று கழக கொடியேற்றி, பாடியநல்லூர் பேரூராட்சி தவெக அலுவலகத்தை திறந்து வைத்து குத்து விளக்கேற்றி வைத்து, 300க்கும் மேற்பட்டோருக்கு 5 கிலோ அரிசி உள்ளிட்ட நலத்திட்ட உதவிகளும் அறுசுவை அன்னதானத்தையும் வழங்கினார். பேரூராட்சி செயலாளர் முத்துக்குமார் முன்னிலை வகித்தார்.

இந்நிகழ்வில் தவெக மாவட்ட, பகுதி, ஒன்றிய, பேரூராட்சி, ஊராட்சி, கிளைக்கழக நிர்வாகிகள் உறுப்பினர்கள், பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டு சிறப்பித்தனர்.




## திண்டுக்கல், சிறுமலை பழையூர் பகுதியில் உள்ள புறக்காவல் நிலையத்தை இன்று மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஜெயக்குமார் ஆய்வு மேற்கொண்டு பணியில் உள்ள காவலர்களுக்கு அறிவுரைகள் வழங்கினார்

# திருப்பத்தூரில் இந்திய தலைமை தேர்தல் கமிஷனர் ஞானேஸ்வரனை கண்டித்து காங்கிரஸ் கட்சி சார்பில் அறவழிப் போராட்டம் மற்றும் கண்டன ஆர்ப்பாட்டம்

திருப்பத்தூர் செப்டம்பர் 30

இந்திய தலைமை தேர்தல் கமிஷனர் ஞானேஸ்வரனை கண்டித்தும், மீண்டும் இந்தியாவில் வாக்குசீட்டு முறையில் தேர்தலை நடத்தக்கோரியும் திருப்பத்தூர் கலெக்டர் அலுவலகம் அருகே திருப்பத்தூர் மாவட்ட காங்கிரஸ் கமிட்டி சார்பில் சத்தியாகிரகம் முறையில் அறவழிப் போராட்டம் மற்றும் கண்டன ஆர்ப்பாட்டம் நடந்தது. இந்த ஆர்ப்பாட்டத்துக்கு மாவட்ட தலைவர் விஜய் இளஞ்செழியன் தலைமை வகித்தார்.




திருப்பத்தூர் நகர தலைவர் பாரத் வரவேற்றார். மாவட்ட பொருளாளர் கொத்தூர் மணி முன்னிலை வகித்தார். சிறப்பு அழைப்பாளராக முன்னாள் எம்பி ஜெயகுமார் கலந்து கொண்டு பேசினார்.

ஆர்ப்பாட்டத்தில் மாவட்ட துணைதலைவர்கள் வெங்கடேசன், நெடுமாறன், முருகன், துணை செயலாளர் வரதாபாய், ஒன்றிய தலைவர் சாந்தசீலன், பாலாஜி, வக்கீல் ஜவஹர் உள்ளிட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டனர். நகர துணை தலைவர் பாஸ்கரன் நன்றி கூறினார்.




திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக மக்கள் குறைதீர்க்கும் நாள் பல்நோக்கு கூட்டரங்கில் மாவட்ட ஆட்சித் தலைவர் ச.கவிதா பொதுமக்களிடமிருந்து கோரிக்கை மனுக்களை பெற்றுக் கொண்டு அதற்கு உரிய தீர்வு காண சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களுக்கு உத்திரவிட்டார். தனித்துணை ஆட்சியர்(ச.பா.தி) வெங்கடேசன், கூடுதல் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (நிலம்) சாந்தமூர்த்தி, மாவட்ட பிற்படுத்தப்பட்டோர்மற்றும்சிறுபான்மையினர்நல அலுவலர்உஷாராணி, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (தேர்தல்) வேல்முருகன், உதவி இயக்குநர் (பயிற்சி) கே.சாகித்யா மற்றும் பல்துறை சார்ந்த அலுவலர்கள் உடனிருந்தனர்.

# ஆர். பி. கோத்தி ஜெயின் மகளிர் கல்லூரி, செங்குன்றம் காவல் நிலையம் இணைந்து போதைப் பொருள் விழிப்புணர்வு பேரணி

செங்குன்றம், செப்டம்பர் 30:

செங்குன்றம் ஆர்.பி. கோத்தி ஜெயின் மகளிர் கல்லூரி, செங்குன்றம் காவல் நிலையம் இணைந்து நடத்திய போதை விழிப்பு உணர்வு பேரணி செங்குன்றம் மார்க்கெட் முதல் பேருந்து நிலையம் வரை கல்லூரி முதல்வர் முனைவர் மோ. மகாலட்சுமி, துணை முதல்வர் கி. கீதா ஆகியோர் தலைமையில் நடைபெற்றது. செங்குன்றம் காவல் ஆய்வாளர் கிருஷ்ணமூர்த்தி சிறப்பு அழைப்பாளராகக் கலந்து கொண்டு பேரணியை துவக்கி வைத்தார். இப்பேரணியில் சுமார் 200க்கும் மேற்பட்ட மாணவியர் "போதைப் பொருள் வேண்டாம் என்ற விழிப்புணர்வு பதாகைகளுடன் பொதுமக்களிடையே விழிப்பு உணர்வு ஏற்படுத்தினர். இதில் செங்குன்றம் காவல் நிலைய உதவி ஆய்வாளர்கள், காவலர்கள், கல்லூரி ஆசிரியைகள் கலந்து கொண்டனர்.






திண்டுக்கல்மாவட்டம்கொடைக்கானலில்சமுதாயவளைகாப்புநிகழ்ச்சி கொடைக்கானலில் உள்ள ஒரு தனியார் மண்டபத்தில் நடைபெற்றது இதில் பழனி சட்டமன்ற உறுப்பினர் ரவி மனோகரன் கலந்து கொண்டு கர்ப்பிணி பெண்களுக்கு ஆசீர்வாதம் வழங்கினால் பின்பு கர்ப்பிணி பெண்களுக்கு கர்ப்பிணி பெட்டகம் வழங்கி ஆசீர்வதித்தார் இதில் கொடைக்கானல் அனைத்து இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக்கழக நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் கலந்துகொண்டு சிறப்பித்தன பின்பு அனைத்து கர்ப்பிணி பெண்களுக்கும் அறுசுவை விருந்து அளித்து பழனி சட்டமன்ற உறுப்பினர் அவர்களுக்கு உணவு வழங்கும் நிகழ்ச்சி மிகவும் சிறப்பாக நடைபெற்றது

### பெண்களின் உழைப்புக்கு சந்தை வாய்ப்பு:

# மகளிர் சுயஉதவிக் குழுக்களின் உற்பத்திப் பொருட்கள் கண்காட்சி

## கலெக்டர் வந்தனா கார்க் தொடங்கி வைத்தார்

திருவண்ணாமலை, செப்.30

பெண்களின் உழைப்புக்கு சந்தை வாய்ப்பு! மகளிர்சுயஉதவிக் குழுக்களின் உற்பத்திப் பொருட்கள் கண்காட்சி – கலெக்டர் வந்தனா கார்க் தொடங்கி வைத்தார்

திருவண்ணாமலை மாவட்டத்தில் மகளிர் சுய உதவிக் குழுக்கள் தயாரிக்கும் பொருட்களுக்கு சந்தை வாய்ப்பை ஏற்படுத்தி, அவர்களின் வருமானத்தை அதிகரிக்கும் நோக்கில் உற்பத்திப் பொருட்கள் சந்தைப்படுத்தும் நிகழ்ச்சி தொடங்கப் பட்டுள்ளது.

திருவண்ணாமலை கலைஞர்கருணாநிதி அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் இன்று (29.09.2026) நடைபெற்ற நிகழ்ச்சியை மாவட்ட ஆட்சியர் வந்தனா கார்க் தொடங்கி வைத்து, மகளிர் சுயஉதவிக் குழுக்கள் அமைத்திருந்த கண்காட்சி அரங்குகளை பார்வையிட்டார்.

மாவட்டத்தில் தமிழ் நாடு மாநில ஊரக மற்றும் நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் கீழ் செயல்படும் வட்டாரங்கள், நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளைச் சேர்ந்த மகளிர் சுயஉதவிக் குழுக்கள் தயாரிக்கும் பல்வேறு பொருட்கள் கண்காட்சியில் இடம்பெற்றிருந்தன. பெண்களின் உழைப்புக்கு புதிய சந்தை மகளிர் சுயஉதவிக் குழுக்கள் தயாரிக்கும் பொருட்களுக்கு உரிய சந்தை வாய்ப்புகள் கிடைப்பதன் மூலம், குழு உறுப்பினர்களின் வருமானம் அதிகரிப்பதுடன், அவர்களின் பொருளாதாரசுயநிலையும் மேம்படும்.

கண்காட்சி அரங்குகளில் மகளிர் குழுக்கள்தயாரித்த சிறுதானிய வகைகள், தேன், எண்ணெய் வகைகள், உணவுப் பொருட்கள், கைவினைப் பொருட்கள், ஆடைகள், சோப்பு, சலவைத் தூள், விதைகள் உள்ளிட்ட பல்வேறு பொருட்களை மாவட்ட ஆட்சியர் பார்வையிட்டார்.



மகளிர் குழுக்களுக்கு வழங்கப்படும் கடனுதவிகள் மற்றும் தொழில் சார்ந்த பயிற்சிகள் குறித்தும் பொதுமக்களுக்கு விரிவாக எடுத்துரைத்து, பெண்களின் உற்பத்திப் பொருட்களை வாங்கி ஆதரிக்க பொதுமக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும் என அலுவலர்களுக்கு மாவட்ட ஆட்சியர் அறிவுறுத்தினார்.

பெண்களின் திறமைக்கும் உழைப்புக்கும் உரிய சந்தை கிடைக்கச் செய்வதன் மூலம், மகளிர் சுயஉதவிக் குழுக்களின் பொருளாதார வளர்ச்சியை மேலும் வலுப்படுத்த முடியும் என தெரிவிக்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை இணை இயக்குநர் மற்றும் திட்ட இயக்குநர் பூ.காஞ்சனா, திருவண்ணாமலை அரசு கலைக் கல்லூரி முதல்வர் முனைவர் இ. ரேவதி மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

தேசபக்தி நாளிதழில் அனுபவம் உள்ள செய்தியாளர்கள், போட்டோகிராபர்கள், தாலுகா செய்தியாளர்கள் தேவை

தமிழகம் மற்றும் புதுச்சேரி ஆகிய மாநிலங்களில் மாவட்ட மற்றும் தாலுகா வாரியாக அனுபவம் உள்ள பத்திரிக்கை துறையில் சாதிக்க விரும்பும் ஆண் ,பெண் நிருபர்கள் தேவை

G.ராஜா ஆசிரியர்: 9842364068

செய்தி மற்றும் விளம்பர தொடர்புக்கு

R.கண்ணன் இணைஆசிரியர்: 9994422779




திண்டுக்கல் மாவட்டம் தொப்பம்பட்டி ஒன்றியம் மிடா பாடு ஆரம்ப சுகாதார நிலையம் ஆனது சாலையில் இருந்து இரண்டு அடி பள்ளத்தில் அமைந்துள்ளது இதனால் மழைக்காலங்களில் மழை நீர் குளம் போல் தேங்கியுள்ளது இதனால் பொதுமக்கள் மருத்துவமனை பணியாளர்கள் உள்ளிட்டோர் மற்றும் மாற்றுத் திறனாளிகள்மருத்துவமனைவளாகத்திற்குள்நுழையமுடியாதசூழல்ஏற்பட்டுள்ளது எனவே ஆரம்ப சுகாதார நிலையத்தை ரோடு உயரத்துக்கு உயர்த்தி மழை நீர் தேங்காமல்வழிவகைசெய்யவேண்டும்எனபொதுமக்கள்மற்றும்சமூகஆர்வலர்கள் மற்றும் நோயாளிகள் மற்றும் மாற்றுத்திறனாளிகள் சார்பாக இந்த போராட்டம் மூலம் கேட்டுக்கொள்கிறோம்



## 'தவெக வேட்பாளர்கள் குதிரை பேர ஊழலுக்கு காரணமானவர்கள்'

## நயினார் நாகேந்திரன் விமர்சனம்

தவெக வேட்பாளர்கள் குதிரை பேர ஊழலுக்கு காரணமானவர்கள் என பாஜக மாநிலத் தலைவர் நயினார் நாகேந்திரன் விமர்சித்துள்ளார்.

மதுராந்தகத்தில் அதிமுக வேட்பாளர் கணிதா சம்பத்துக்கு ஆதரவாக, பாஜக மாநிலத் தலைவர் நயினார் நாகேந்திரன் நேற்று பிரச்சாரத்தில் ஈடுபட்டார்.

அப்போது அவர் பேசியதாவது: மதுராந்தகம் சட்டப்பேரவை தொகுதியில் அதிமுக பெயரைக் கூறி வெற்றி பெற்றவர்கள் என்ன செய்தார்கள் என்பது உங்களுக்கு தெரியும். 10 நாட்களில் ராஜினாமா செய்த அவர்கள் மீண்டும் தேர்தலில் வேறு கட்சியிலிருந்து போட்டியிடுகிறார்கள்.

அவர்கள் குதிரை பேரம் ஊழலுக்கு காரணமாகியுள்ளார்கள். நான்கு மாத ஆட்சியில் என்ன நடந்தது என்பது சிந்தித்து பார்த்து மக்கள் வாக்களிக்க வேண்டும். அதனால், அதிமுக வேட்பாளர்களையே ஆதரிக்க வேண்டும்.

மேலும் தவெக தலைவர் விஜய்யை இந்தியாவின் வருங்கால பிரதமர் என பேசி வருகின்றனர். ஆனால், பிரதமர் பதவி என்பது அவ்வளவு சாதாரணமானது அல்ல. இந்த இடைத்தேர்தலில் வெற்றி பெற்றால் அதிமுக பெரிய வாய்ப்பை பதிவு செய்யும். நயினார் நாகேந்திரனை தொட்டுப் பாருங்கள் பின்னர் என்ன நடக்கும் என்று உங்களுக்கு தெரியும். பட்டினப்பாக்கத்தில் தலைமைச்செயலகம் என்பது திட்டமிடாத செயல். அதிமுக வேட்பாளரை ஆதரியுங்கள், தமிழகத்தில் மாற்றத்தை ஏற்படுத்துங்கள். இவ்வாறு அவர் பேசினார்.

## டாஸ்மாக் கடைகளுக்கு ரூ.5000 வரை பராமரிப்பு தொகை: நிர்வாகம் உத்தரவு

டாஸ்மாக் கடைகளை தூய்மையாகப் பராமரிக்கவும், பணியாளர்களுக்கான குடிநீர் உட்பட அடிப்படை தேவைகளுக்காகவும் ரூ.5000 வரை பராமரிப்பு தொகை வழங்கப்படவுள்ளது.

தமிழகத்தில் தற்போது 4,048 டாஸ்மாக் கடைகள் இயங்கி வருகின்றன. இந்த கடைகளில் எம்ஆர்பியை விட கூடுதல் விலைக்கு மது விற்பனை செய்யப்படுவதாகக் குற்றச்சாட்டு இருந்து வருகிறது.




இதனிடையே, கடை வாடகை, பராமரிப்பு போன்ற செலவுகளை தாங்களே ஏற்பதால் மது பிரியர்களிடம் கூடுதல் தொகை வாங்குவதாக கடை பணியாளர்கள் தெரிவித்தனர்.

இந்நிலையில் இந்த பிரச்சினைக்கு தீர்வுகாணும் விதமாக டாஸ்மாக் கடை பணியாளர்களுக்கு ஊதிய உயர்வு, பண்டிகை கால முன்பணம், கடை பராமரிப்புக்கு தொகை ஆகியவை வழங்கப்படும் என அண்மையில் நடைபெற்ற சட்டப்பேரவை கூட்டத்தொடரில் அறிவிப்புகள் வெளியிடப்பட்டன.

அதன்படி, டாஸ்மாக் கடைகளைதூய்மையாகப் பராமரிக்க, பணியாளர்களுக்கான குடிநீர் உட்பட அடிப்படை தேவைகளுக்கான தொகை அக்.1 முதல் வழங்கப்படவுள்ளதாக டாஸ்மாக் நிர்வாகம் அறிவித்துள்ளது.

இதுகுறித்து டாஸ்மாக் நிர்வாகம் பிறப்பித்த உத்தரவு: 2003ம் ஆண்டில் கடைகளின் தினசரி பராமரிப்பு செலவுகளுக்காக மாதம் ரூ.250 வழங்கப்பட்டு வந்தது, அந்த தொகை படிப்படியாக உயர்த்தப்பட்டு, 2023ம் ஆண்டு முதல் ரூ.750 வழங்கப்படுகிறது.

இந்நிலையில் அமைச்சர் வெளியிட்ட அறிவிப்பின்படி, கடை பராமரிப்பு மற்றும் பணியாளர்களின் அடிப்படை தேவைகளுக்காக மாதம்தோறும் மாநகராட்சி பகுதிகளில் உள்ள 842 கடைகளுக்கு தலா ரூ.5ஆயிரமும், நகராட்சி பகுதிகளில் உள்ள 835 கடைகளுக்கு தலா ரூ.4 ஆயிரமும், கிராமப்புற பகுதிகளில் உள்ள 2,371 கடைகளுக்கு தலா 3 ஆயிரமும் வழங்கப்படும்.

இதனிடையே முன்பு வழங்கப்பட்டு வந்த தொகை ரூ.750 நிறுத்தப்படும். அக்.1 முதல் இந்த நடைமுறை தொடங்கும், அக்டோபர்மாதத்துக்கான தொகை, செப்.30ம் தேதியே வரவு வைக்கப்படும். இதேபோல ஒவ்வொரு மாதமும் அதற்கு முன்னரே இந்த தொகை கொடுக்கப்படும்.

ஒவ்வொரு மாதமும் கடை மேற்பார்வையாளரின் சம்பளத்துடன் இந்த தொகை வரவு வைக்கப்படும். அவரே இந்த தொகை மற்றும் அதற்கான செலவுகளுக்கு பொறுப்பு.

இந்த தொகையை, கடையை தினசரி சுத்தம் செய்ய, அதற்கான பொருட்கள் துடைப்பம், ரசாயனங்கள், பினாயில் ஆகியவை வாங்கவும், குப்பை தொட்டிகள், கடை சுத்தம் செய்ய நபரை பணியில் ஈடுபடுத்துவதற்கு, குடிநீர் மற்றும் அதற்கானவாட்டர்டிஸ்பென்சர் ஆகியவை வாங்க, கடைக்கு தேவையான பிற அடிப்படை வசதிகளை ஏற்படுத்த மட்டுமே பயன்படுத்த வேண்டும், மற்ற தனிப்பட்ட செலவுகளுக்கு பயன்படுத்தக்கூடாது. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.




இராணிப்பேட்டை மாவட்ட ஆட்சியர் ந.ப்ரியா ரவிச்சந்திரன், இ.ஆ.ப.. இராணிப்பேட்டை கிறிஸ்தவ மருத்துவக் கல்லூரி மருத்துவமனை (CMC) வளாகத்தில். இதயவியல். இருதயமார்பு அறுவை சிகிச்சைத் துறை. மற்றும் செவிலியப் பிரிவு இணைந்து நடத்திய உலக இதய தினம் 2026 நிகழ்ச்சியில் இதயம் தொடர்பாக நடத்தப்பட்ட பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பாராட்டுச் சான்றிதழ் வழங்கினார். உடன், CMC மருத்துவமனை இயக்குநர் மரு.பிஜு ஜார்ஜ், மருத்துவக் கண்காணிப்பாளர் மரு.ஐ.ராஜேஷ், திருமதி.ரீனா ஜார்ஜ் இணை செவிளியர் கண்காணிப்பாளர். CMC மற்றும் இதயவியல் துறைத் தலைவர் மரு.விஜி சாமுவேல் தாம்சன். இருதயமார்பு அறுவை சிகிச்சைத் துறைத் தலைவர் மரு.மது ஆண்ட்ரூ பிலிப்ஸ், மருத்துவம் மற்றும் அறுவை சிகிச்சை செவிலியச் சிறப்புத் துறைத் தலைவர் பேராசிரியர் ஜபின் காஜா மற்றும் பலர் உள்ளனர்.

### மாவட்ட ஆட்சியர் வந்தனா கார்க் அதிரடி அறிவிப்பு:

## காந்தி ஜெயந்தியன்று திருவண்ணாமலையில் அனைத்து மதுபானக் கடைகளும் மூடல்

திருவண்ணாமலை: செப்.30

காந்தி ஜெயந்தியை முன்னிட்டு, வரும் அக்டோபர் 2ம் தேதி திருவண்ணாமலை மாவட்டத்தில் உள்ள அனைத்து அரசு மற்றும் தனியார் மதுபானக் கடைகள் மற்றும் மதுபானக்கூடங்கள் மூடப்படும் என மாவட்ட ஆட்சியர் வந்தனா கார்க் அறிவித்துள்ளார்.

மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை ஆணையரின் அறிவுறுத்தலின்படி, 02.10.2026 வெள்ளிக்கிழமை காந்தி ஜெயந்தி தினத்தன்று மாவட்டத்தில் உள்ள அனைத்து அரசு மதுபானக் கடைகளான டாஸ்மாக் கடைகள் மூடப்பட வேண்டும். அதேபோல், முன்னாள் இராணுவ வீரர்களுக்கான மதுபான அங்காடிகள் (FL4A) மற்றும் அரசு மற்றும் தனியார் மதுபானக்கூடங்கள் (FL3) ஆகியவையும் அன்றைய தினம் செயல்படாது என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, மாவட்ட ஆட்சியர் வந்தனா கார்க் உத்தரவின்பேரில், அக்.2ம்தேதிதிருவண்ணாமலை மாவட்டம் முழுவதும் மதுபான விற்பனை இல்லாத நாளாக (Dry Day) கடைப்பிடிக்கப்படும்.

அன்றைய தினம் டாஸ்மாக் கடைகள், முன்னாள் இராணுவ வீரர்களுக்கான மதுபான அங்காடிகள் மற்றும் அரசு, தனியார் மதுபானக்கூடங்கள் உள்ளிட்ட அனைத்து மதுபான விற்பனை நிலையங்களும் விற்பனையின்றி மூடப்பட்டிருக்கும்எனமாவட்ட ஆட்சியர் வந்தனா கார்க் தெரிவித்துள்ளார்.

மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.இரா.வைத்திநாதன், இ.ஆப, அவர்கள் செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளதாவது,

தேனி மாவட்டத்தில் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் (MSME) துறையின் வளர்ச்சியை மேலும் ஊக்குவிக்கவும், தொழில்முனைவோருக்கு தேவையான வங்கிக் கடன்கள் தடையின்றி விரைவாகக் கிடைப்பதை உறுதி செய்யவும் மாவட்ட முன்னோடி வங்கி (Lead Bank), மாவட்ட தொழில் மையம் (DIC), தாட்கோ (TAHDCO) தமிழ்நாடு மாநில நகர்ப்புற / ஊரக வாழ்வாதார இயக்கம் (மகளிர் திட்டம்) ஆகிய துறைகளின் கூட்டு மற்றும் ஒருங்கிணைப்பில் வருகின்ற 06.10.2026 அன்று மாவட்ட ஆட்சியர் அலுவலக புதிய கூட்டரங்கில் சிறப்பு கடன் விழிப்புணர்வு மற்றும் வசதியாக்கல் முகாம் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் தலைமையில் நடைபெற உள்ளது.

இம்முகாமில் அரசு சுயவேலைவாய்ப்பு கடன்திட்டங்களின் கீழ் பெறப்பட்டு வங்கிகளில் நிலுவையில் உள்ள கடன் விண்ணப்பங்களுக்கு உடனுக்குடன் பரிசீலித்து ஒப்புதல் அளிக்கவும், பயனாளிகளுக்கு விரைவாகக் கடன்தொகையைவழங்கிடவும்தேவையானஅனைத்து நடவடிக்கைகளும் இம்முகாமில் மேற்கொள்ளப்படும்.

எனவே, தேனி மாவட்டத்தைச் சேர்ந்த தொழில்முனைவோர்கள், இளைஞர்கள் மற்றும் மகளிர் சுயஉதவிக் குழு உறுப்பினர்கள் இச்சிறப்பு முகாமில் கலந்து கொண்டு பயன்பெறுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.இரா.வைத்திநாதன், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

## 'தவெகவும் மதிமுகவும் இரட்டைக் குழல் துப்பாக்கி' துரை வைகோ கருத்து

தாராபுரத்தில் நேற்று நடைபெற்ற மதிமுக செயல்வீரர்கள் கூட்டத்தில் அமைச்சர்கள் மற்றும் மதிமுக முதன்மைச் செயலாளர் துரை வைகோ ஆகியோர் பேசினர்.



அமைச்சர் செங்கோட்டையன் : 90களில் வைகோ அறிவாலயத்துக்குள் நுழைந்திருந்தால் இன்றைக்கு மிகப் பெரிய அரசியல் மாற்றம் ஏற்பட்டிருக்கும். வருங்காலத்தில் மதிமுக முக்கிய எதிர்க்கட்சியாக வரக்கூடிய காலம் அமையும்.

அமைச்சர்என்.ஆனந்த்: மக்கள் பிரச்சினைகள் அனைத்தையும் தவெக தீர்த்து வைக்கும். அடுத்த தேர்தலில் 234 தொகுதிகளிலும் வெற்றி பெற்று, துரை வைகோ ஆளுங்கட்சியாகவே இருப்பார்.

அமைச்சர் ஆதவ் அர்ஜூனா: விலகிச் சென்ற இரு மதி முக எம்எல்ஏக்களும் வைகோவின் பேச்சைக் கேட்டிருந்தால் அமைச்சராகியிருக்கலாம். அந்த இரு எம்.எல்.ஏக்களையும்திமுகவிலைக்கு வாங்கிவிட்டது.

துரை வைகோ: தவெகவும் மதிமுகவும் இரட்டைக் குழல் துப்பாக்கி போன்றவை. தவெக கூட்டணியில் இணைந்ததால் நாங்கள் 2 எம்எல்ஏக்களை இழந்துள்ளோம். தீயசக்தியான திமுகவை ஒழிப்பதே எங்களின் முதன்மை இலக்கு.

### திருப்பத்தூரில் இந்திய தலைமை தேர்தல் கமிஷனர் ஞானேஷ் குமாரை கண்டித்து

## காங்கிரஸ் கட்சி சார்பில் அறவழி போராட்டம் மற்றும் கண்டன ஆர்ப்பாட்டம்

திருப்பத்தூர் செப்டம்பர் 30

இந்திய தலைமை தேர்தல் கமிஷனர் ஞானேஷ் குமாரை கண்டித்தும், மீண்டும் இந்தியாவில் வாக்குசீட்டு முறையில் தேர்தலை நடத்தக்கோரியும் திருப்பத்தூர் கலெக்டர் அலுவலகம் அருகே திருப்பத்தூர் மாவட்ட காங்கிரஸ் கமிட்டி சார்பில் சத்தியாகிரகம் முறையில் அறவழிப்போராட்டம் மற்றும் கண்டன ஆர்ப்பாட்டம் நடந்தது. இந்த ஆர்ப்பாட்டத்துக்கு மாவட்ட தலைவர் விஜய் இளஞ்செழியன்தலைமை வகித்தார். திருப்பத்தூர் நகர தலைவர் பாரத் வரவேற்றார். மாவட்ட பொருளாளர் கொத்தூர் மணி முன்னிலை வகித்தார். சிறப்பு அழைப்பாளராக முன்னாள் எம்பி ஜெயகுமார் கலந்து கொண்டு பேசினார். ஆர்ப்பாட்டத்தில் மாவட்ட துணை தலைவர்கள் வெங்கடேசன், நெடுமாறன், முருகன், துணை செயலாளர் வரதாபாய், ஒன்றிய தலைவர் சாந்தசீலன், பாலாஜி, வக்கீல்ஜவஹர்உள்ளிட்ட நிர்வாகிகள்கலந்துகொண்டனர். நகர துணை தலைவர் பாஸ்கரன் நன்றி கூறினார்.

Printed by S.BALASUBRAMANIAN and Published by M.VEERAMANI on behalf of M.VEERAMANI, Printed at "SANKARJI COMPUTER GRAPHICS PRINTER", No. 8/31, Seegampatty, K.Pudupatty (Post), Kulithalai (Taluk) Karur (District) - 639 105, Published At No. 1080. Kattupatti Road. Viralimalai (Taluk), Pudukkottai (District)-621316 EDITOR: GRAJA